# சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ILO) இலங்கை மற்றும் மாலைதீவுகள் நாடுகளுக்கான புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## திருமதி ஜோனி சிம்ப்சன் 15 ஜனவரி 2024 அன்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

Press Release

**16 ஜனவரி 2024 அன்று உடனடி வெளியீட்டுக்காக**

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளராக திருமதி ஜோனி சிம்ப்சன் (Joni Simpson) 15 ஜனவரி 2024 அன்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த நியமனமானது சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. கில்பர்ட் ஹோங்போ (Gilbert Houngbo) அவர்களால் வழங்கப்பட்டுள்ளதுடன் திருமதி ஜோனி வேலை உலகின் பாலின சமத்துவம் மற்றும் உள்வாங்கல் துறைகளில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவர்.

இலங்கைக்கான இந்த பணிப்பாளர் நியமனத்துக்கு முன்னர், திருமதி ஜோனி சிம்சன் அவர்கள் கிழக்கு, தென்கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான பாலின சமத்துவம் மற்றும் பாரபட்சம் காட்டாமை ஆகிய துறைகளில் ILO வின் சிரேஷ்ட தொழிநுட்ப நிபுணராக கடமையாற்றியுள்ளதுடன் , அப் பதவில் தொழிலில் வன்முறை, பாரபட்சம், மற்றும் துன்புறுத்தல் ஆகியவற்றை நீக்குதல்; பராமரிப்பு கொள்கைகள் மற்றும் சேவைகளை வழங்குதல் முன்னேற்றல்; வணிக மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இணைப்பு வலையமைப்பு மேம்படுத்துதல், ஆகிய ILO முயற்சிகளை வடிவமைத்தார். மேலும், இவர் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நேபாளத்தின் காத்மாண்டுவில் உள்ள சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் நாட்டுக்கான இடைக்கால பணிப்பாளராகவும் (பொறுப்பதிகாரி) கடமையாற்றியுள்ளார். இதற்கு முன்பு ஜெனீவாவில் உள்ள ILO தலைமையகத்தில் பெண்களின் தொழில்முனைவு மற்றும் தொழில்முனைவு கல்விக்கான ILO இன் உலகளாவிய முயற்சிகளுக்கு அவர் தலைமை தாங்கினார்.

கனடா நாட்டவரான திருமதி. சிம்ப்சன், கலாச்சார மானுடவியலில் முதுகலைப் பட்டம் மற்றும் கல்வியில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்.

*சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமானது தொழிலுலகிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அமைப்பாகும். இது சர்வதேச தொழில் நியமங்களை அமைக்கவும், வேலைவாய்ப்பு, தொழிலாளர் உரிமைகள், மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான விடயங்களை தீர்த்துக்கொள்ள சமூக உரையாடலில் ஈடுபடுகிறது, தொழிநுட்ப உதவிகளை வழங்குகிறது. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமானது சமூக நீதியை முன்னேற்றுவதற்கு உலகளாவிய ரீதியில் கண்ணியமான தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான நோக்ககங்களை அடையவும் அரசாங்கங்கள், தொழில் வழங்குநர்கள், தொழிலாளர் அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுகின்றது.*

Web Facebook Twitter Flickr Youtube

**ILO Office for Sri Lanka and the Maldives**
**202 – 204, Bauddhaloka Mawatha,**
**Colombo 7,**
**Sri Lanka.**

**Tel. +94 11 259 2525**
**Fax. +94 11 250 0865**
**E-mail: colombo@ilo.org**

*For information only. Not an official record.*

International Labour Organization

Press Release

**ILO Office for Sri Lanka and the Maldives**
**202 – 204, Bauddhaloka Mawatha,**
**Colombo 7,**
**Sri Lanka.**

**Tel. +94 11 259 2525**
**Fax. +94 11 250 0865**
**E-mail: colombo@ilo.org**

*For information only. Not an official record.*